[4th August 1966

அடையாதவர்களைக் கசக்கிப் பிழிந்து வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் சொன்ன விவரப்படி வசூல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதைப்பற்றி விவரங்கள் கொடுத்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த விலக்கு அளிக்கப்படுவது எந்தத் தேதியிலிருந்து கொடுக்கப்படும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

மணிமுத்தாறு அபிவிருத்தி வரி

*79 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மணிமுத்தாறு அபிவிருத்தி வரி விதிக்கத் திட்டமிருக்கிறதா ?

(இ) எந்த அடிப்படையில் விதிக்க உத்தேசிக்கப்படுகிறது ?

(உ) வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று அந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா ?

(எ) அவற்றின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The betterment tax is levied according to the provisions of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955, as amended by Act 32 of 1963. According to the provisions contained in the Act, the entire ayacut under the Tambraparani delta and also the ayacut lands under Manimuthar Main Canal in Ambasamudram, Tirunelveli, Nanguneri, Srivaikuntam and Tiruchendur taluks are classified as improved old ayacut. The rate of contribution per acre will be Rs. 50 collectable in ten annual instalments of Rs. 5 per acre.

(*c*) & (*d*) Yes. The Member was already informed that the collection of betterment tax has not been started and that the question of postponement of betterment tax does not therefore arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் அவர்கள் முன்பு அளித்த பதிலைப் பற்றித்தான் இப்பொழுது தெரிவித்தார்கள். ஆனால் இந்த மாதத்தில் பெட்டர்மெண்ட் டாக்ஸ் வசூல் செய்வதற்கு

4th August 1966]

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? சென்ற ஆண்டு பஞ்சநிலை, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலை, தண்ணீர்த் தட்டுப்பாடு இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டே னும் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு காலத்திற்கு வரி விதிப்பதைத் தள்ளி வைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், இந்த வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் வறட்சி என்று சொல்வது பொருத்தமில்லை, ஒரு சில இடங்களைத் தவிர.

தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பயிர்கள்

*80 **கேள்வி—திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நெற் பயிரின் நிலைமையை நேரில் காணச் சுற்றுப்பிரயாணம் செய்தது உண்மையா?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரி வஜா செய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. வெ. ராமையா: (அ) ஆம்.

(இ) தகுதியுள்ள விஷயங்களில் வருவாய்த்துறை வாரியநிலை ஆணைகளின் கீழ் பருவகாலத் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. தீர்வை ஜாஸ்திப் பகுதிகளில் போதிய தண்ணீர் சப்ளை இல்லாமல் தாளடிப் பருவத்தில் பயிர்கள் சாவிரியாகிப் போனதால், எப்போ தேனும் ஒருமுறை பாசனம் தேவைப்படுகிற வேர்க்கடலை, எள் போன்ற புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. அந்தப் பகுதி களில் தண்ணீர்த் தீர்வை விதித்து வாங்கப்படமாட்டாது.

கீழ்க்கண்ட கூடுதலான சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன:—

(1) **பதிவான இருபோக நன்செய் நிலங்கள்:**

(a) விளைச்சல் நான்கணாவாகவும் அதற்குக் குறைவாகவும் இருந்தால்.	இரண்டாம் போகப் பயிர்க் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
(b) விளைச்சல் நான்கணாவுக்கு மேல், ஆறணாவுக்கு மேற்படாமல் (ஆறணாவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	இரண்டாம் போகப் பயிர்க் கட்டணத்தில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(2) **பதிவான ஒரு போக நன்செய் நிலங்கள்:**

(a) விளைச்சல் நான்கணாவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந்தால்.	தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.